00074

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் - மட்டம்-4**
**இறுதிப் பரீட்சை – 2018/2019**
**ESD2236/EPD4536 சமூக உளவியல்**

**பகுதி-I இல் அனைத்து வினாக்களுக்கும், பகுதி-II இல் எவையேனும் மூன்று(03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

| | |
|---|---|
| திகதி: 03.10.2020 | நேரம்: பி.ப.01.30 – பி.ப.04.30 |

## பகுதி -I

1. **'சமூக உளவியல்'** என்ற சொல்லை சுருக்கமாக விளக்குக.

2. இணங்க வைத்தலின் முக்கிய **நான்கு(4)** கூறுகளை பெயரிடுக.

3. **'சமூக சுயம்'** என்பதை ஓர் உதாரணம் மூலம் எடுத்துக்காட்டி உமது மொழி நடையில் சுருக்கமாக விளக்குக.

4. ஆரம்ப பாடசாலை பிள்ளைகளிடையே நேர்மறையான அணுகு முறைகளை வளர்ப்பதற்கு உதவும் **நான்கு(4)** செயற்பாடுகளை பட்டியற்படுத்துக.

5. ஆக்ரோசம் சார் நடத்தைகளை பிள்ளைகளிடத்தில் குறைப்பதற்கு பின்பற்றக் கூடிய **நான்கு(4)** உத்திகளை குறிப்பிடுக.

6. **'பால்நிலை'** மற்றும் **'பால்'** ஆகியவற்றுக்கிடையே காணப்படும் வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக.

7. **'பராபட்சம்'** என்ற பதத்தை சுருக்கமாக விபரிக்குக.

8. முன்பள்ளி பிள்ளைகளின் சமூகம்சார் நடத்தைகள் **நான்கினை(4)** பட்டியற்படுத்துக.

**(5x8=40 புள்ளிகள்)**

## பகுதி -II

9.

i. **'சமூகம் சார் நடத்தை'** எனும் பதத்தை உதாரணங்கள் மூலம் மேற்கோள் காட்டி விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. சமூகம் சார் நடத்தைகளை பாதிக்கக்கூடிய காரணிகளை சுருக்கமாக கலந்துரையாடுக. (இக்காரணிகள் இளம் பிள்ளைகளிடத்தின் சமூகம் சார் நடத்தை வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கின்றதென்பதை நீங்கள் ஆராய வேண்டும்)

**(08 புள்ளிகள்)**

iii. ஆரம்ப பாடசாலை பிள்ளைகளிடத்தில் சமூகம் சார் நடத்தைகளை வளர்ப்பதில் **'ஆசிரியரின் வகிபங்கினை'** ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

10.

i. **'மனப்பாங்கு'** என்ற பதத்தினை வரையறுக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. **'மனப்பாங்கு'** மற்றும் **'நடத்தை'** என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. மனப்பாங்கு சார்ந்த ஏதேனுமொரு கோட்பாட்டடிப்படையில் ஆரம்ப பாடசாலை பிள்ளைகளிடம் ஏற்படும் எதிர்மறையான மனப்பாங்கினை சரி செய்யும் வகையில் ஆசிரியராக நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் **நான்கினை(4)** கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

11.

i. ஆரம்ப பாடசாலை காலத்தில் பிள்ளைகள் தங்களது சமூக உறவை எவ்வாறு வளர்த்துக் கொள்கிறார்கள் என்பதை உதாரணங்கள் மூலம் மேற்கோள் காட்டி விளக்குக.

**(06 புள்ளிகள்)**

ii. ஆரம்ப பாடசாலை காலத்தில் பிள்ளைகளில் **'சமூக சுயத்தை'** வளர்ப்பதற்கு ஒரு ஆசிரியர் பயன்படுத்தக்கூடிய **ஆறு(6)** உத்திகளை குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

iii. நீர் மேற்குறிப்பிட்ட உத்திகளில் **இரண்டினை(2)** தெரிவு செய்து அவற்றை எவ்வாறு பிள்ளைகளிடத்தில் சமூக சுயத்தை வளர்ப்பதற்கு செயற்படுத்த முடியும் என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

**(08 புள்ளிகள்)**

12.

i. ஆரம்ப பாடசாலை பிள்ளைகளிடையே பால்நிலை சார்ந்த விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கு உதவும் **ஐந்து(5)** செயற்பாடுகளை பட்டியற்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

ii. நீர் மேலே குறிப்பிட்டவற்றிலிருந்து **மூன்று(3)** செயற்பாடுகளை தெரிவு செய்து பொருத்தமான எடுத்துக்காட்டுகளை உதாரணங்கள் மூலம் விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. நீர் மேலே குறிப்பிட்டவற்றிலிருந்து ஒரு செயற்பாட்டை தெரிவு செய்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான திட்டத்தினை முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

13.

i. பிள்ளைகளிடத்தில் ஆக்ரோசம் சார் நடத்தை குறித்த **'சமூக கற்றல் கோட்பாட்டின்'** கருத்துக்களை உதாரணங்கள் மூலம் மேற்கோள்காட்டி ஆராய்க.

**(05 புள்ளிகள்)**

ii. ஆரம்ப பாடசாலை பிள்ளைகளின் **நான்கு(4)** பொதுவான ஆக்ரோசம் சார் நடத்தைகளை குறிப்பிடுக.

**(07 புள்ளிகள்)**

iii. நீர் மேலே குறிப்பிட்ட **மூன்று(3)** ஆக்ரோசம் சார் நடத்தைகளை குறைப்பதற்கு பயன்படும் **மூன்று(3)** இணைப்பாடவிதான நடவடிக்கைகளை விபரிக்குக.

**(08 புள்ளிகள்)**